# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

## தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்

Issue 36 | June 2024 | Issue 6





**TNROA மத்திய செயற்குழு கூட்டம் - திருப்பத்தூர்**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டம் 15.06.2024 அன்று திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சசிபிரியா மஹாலில் சிறப்புற நடைபெற்றது. கூட்டத்தில் பங்கேற்ற மாநில நிர்வாகிகள் (கீழே) கொடியேற்ற நிகழ்வில் பங்கேற்ற மத்திய செயற்குழு உறுப்பினர்களின் ஒரு பகுதி




தனிப்பிரதி விலை ரூ.10/-
*Per Copy Rs.10/-*

ஆண்டு சந்தா ரூ.120/-
*Annual Subscription Rs.120/-*



சேலம் மாவட்ட புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் புதிய மாவட்ட நிர்வாகிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரை மாநிலச் செயலாளர் தமிழரசன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சந்தித்து மாவட்டம் சார்ந்த இனங்கள் குறித்து பேசியபோது...



08.07.2024 அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற புதிய மாவட்ட நிர்வாகிகள் பதவியேற்பு விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.
பின்னர் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் திருமதி சரயு, இ.ஆ.ப., அவர்களுடனான சந்திப்பு.



# களம் காண்பாய்!

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைரவிழா ஆண்டு 16ஆம் மாநில மாநாடு வருகின்ற ஆகஸ்ட் 2 & 3 சென்னையில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. 10 ஆண்டுகள் இடைவெளியில் நடைபெறும் உறுப்பினர்களால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மாநில மாநாடு இதோ வந்து விட்டது.

அமைச்சர் பெருமக்கள், தொழிற்சங்க தலைவர்கள், தோழமைச் சங்க நிர்வாகிகள் கலந்துகொள்ளும் மாநாட்டில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வருவாய்த்துறை அலுவலர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர். பிரதிநிதிகள் மாநாடு, நம்மை நாமே புதுப்பித்துக் கொள்ளும் வகையில் ஆக்கபூர்வமான கருத்து விவாதங்களோடு நடைபெற உள்ளது. இதில் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் பெண் தோழர்களும், இளம் தலைமுறையினரும் பங்குபெற்று சங்க பயிற்சி பெற உள்ளனர்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்ற தலைப்பில் எழுத்தாளர் பாரதி கிருஷ்ணகுமார் அவர்கள் கருத்தரங்கில் சிறந்த உரை நிகழ்த்த உள்ளார்.

அரசு ஊழியர் இயக்க வரலாறு புத்தகம் வெளியிடுதல், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்திற்கான புதிய இணையதளம் தொடங்கி வைத்தல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் பிரதிநிதிகள் மாநாட்டில் நடைபெற உள்ளது.

மாநாட்டின் முத்தாய்ப்பாக கோரிக்கை முழக்க பேரணி அண்ணா சிலையிலிருந்து தொடங்கி கலைவாணர் அரங்கம் வரை நடைபெற உள்ளது. இதில் ஆயிரக்கணக்கான வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை முழங்க உள்ளனர்.

பொது மாநாட்டில் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு தீர்மானமாக நிறைவேற்றப்பட உள்ளது. இளநிலை வருவாய் ஆய்வாளர் & முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித்த அரசாணை கடந்த பல ஆண்டுகளாக காலதாமதம் செய்யப்பட்ட நிலையில், இவ்வாணைகளை பெறுவதற்கான இறுதி கட்டத்தில் நாம் உள்ளோம்.

மாநில மாநாட்டில் ஊழியர் நலன் சார்ந்த பல கோரிக்கைகள் மற்றும் துறையின் மேம்பாட்டுக்காக பல கோரிக்கைகளை வலியுறுத்த உள்ளோம். இதில் குறிப்பாக வருவாய் துறையில் அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்த வேண்டும், மக்கள் தொகை அடிப்படையில் புதிய கிராமங்கள் உள்வட்டங்கள் ஏற்படுத்த வேண்டும், மற்ற துறைகளைப் போன்று இணை ஆணையர் அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட வேண்டும் உள்ளிட்டவை அடக்கம்.

நீண்ட பாரம்பரியம் கொண்ட வருவாய்த்துறையில் பாதுகாவலனாக விளங்கி வரும் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில மாநாட்டில் அனைத்து மாவட்டங்களை சேர்ந்த நிர்வாகிகள், மூத்த முன்னோடிகள், இளம் தலைமுறையினர், பெண்கள் என அனைவரும் பங்குகொண்டு, நமது வரலாற்றில் இது ஒரு திருப்புமுனை மாநாடு என்பதாக அமைந்திட வேண்டும்.

தலைநகர் நோக்கி முன்னேறுவோம்..

இனி ஒரு விதி செய்வோம்! ■

தொலைபேசி எண் : 28593458

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION
Recognised in G.O. MS.No. 2141 Public (Service - A)
Department Dated 06-10-1966
மாநில மையம்
க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.

நாள்: 15.06.2024

# மத்திய செயற்குழு கூட்ட முடிவுகள் - திருப்பத்தூர்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டம் 15.06.2024 அன்று திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி சசிபிரியா மஹாலில் சிறப்புற நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமை வகித்தார். பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் கடந்த கால நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். மத்திய செயற்குழு கூட்டத்தின் முதல் நிகழ்வாக சங்க கொடியினை மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் ஏற்றி வைத்தார். திருப்பத்தூர் மாவட்டத் தலைவர் திரு.க.அருள்மொழிவர்மன், வரவேற்புரை ஆற்றினார். அஞ்சலி தீர்மானத்தை மாநிலத் துணைத்தலைவர் திரு.வெ.அர்த்தனாரி முன்மொழிந்தார். இக்கூட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர் திரு.இ.மணிகண்டன் அனுமதி பெற்றும், மாநிலத் துணைத் தலைவர் இரா.மங்களபாண்டியன் மற்றும் மாநிலச் செயலாளர் திரு.மு.சுப்பு ஆகியோர் தகவலின்றியும் கலந்து கொள்ளவில்லை. இதர மாநில நிருவாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர். இச்செயற்குழு கூட்டத்தில் விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் நீங்கலாக, 35 மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட நிருவாகிகள் கலந்து கொண்டனர்.

கடந்த 02.03.2024 அன்று திருவள்ளூரில் நடைபெற்ற அவசர மத்திய செயற்குழுவிற்கு பின்பாக இயற்கை எய்திய கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த தட்டச்சர் திருமதி.பாக்கியலட்சுமி, மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மணிமேகலை, சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த துணை வட்டாட்சியர்கள் திருமதி.நர்மதா, திரு.செந்தில்குமார் மற்றும் பதிவறை எழுத்தர் திரு.மாதையன், வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலக உதவியாளர் திரு.ஜெய்சங்கர், இராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த வட்டாட்சியர் திருமதி. கந்திர்பாவை, திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த வட்டாட்சியர் திரு.சிவச்சந்திரன், முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.மாணிக்கமூர்த்தி மற்றும் உலகெங்கும் பல்வேறு தீவிரவாத செயல்கள் மற்றும் இயற்கை சீற்றங்களினால் உயிரிழந்தவர்களுக்கும் இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தனது தலைமை உரையில், கடந்த கால நடவடிக்கைகளில் மாநில மையத்தின் செயல்பாடுகள் சிறப்பானதாக அமைந்துள்ளது என்றும்,எனவே ஒவ்வொரு மத்திய செயற்குழுவிலும் கடந்த கால நடவடிக்கைகளை ஆய்வு செய்வது மிகவும் தேவையான நடவடிக்கையாக அமைந்துள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் கடந்த கால நடவடிக்கைகளில் நமது வாழ்வாதார கோரிக்கைகளின் மீது விரைந்து அரசாணை வழங்கிட வலியுறுத்தி 13.02.2024 முதல் நான்கு கட்ட போராட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டது என்றும், இதில் முத்தாய்ப்பாக காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம் தொடங்கிய முதல் நாளிலேயே 10500க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றது மிகச்சிறப்பான

நிகழ்வு என்றும், இப்போராட்டத்தின் விளைவாக ஒட்டுமொத்த நிருவாகமும் ஸ்தம்பித்ததன் அடிப்படையில் நமது பிரதான கோரிக்கையான பணியிறக்க பாதுகாப்பு அரசாணை இரண்டாம் நாளிலேயே வெளியிடப்பட்டு நமது போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர அரசு தரப்பில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 02.03.2024 அன்று திருவள்ளூர் அவசர மத்திய செயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி அனைத்து கோரிக்கைளும் நிறைவேறும் வரை போரட்டத்தை 11 நாட்கள் தொடர்ந்து நடத்தியதன் அடிப்படையில் 116 புதிய ஈப்புகள் ஒதுக்கீடு உள்ளிட்ட மூன்று அரசாணைகள் பெற்றது நமது இயக்கத்தின் வரலாற்று சாதனை எனவும் உறுதிபட தெரிவித்தார்.

கடந்த 07.03.2024 அன்று சென்னை வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக காத்திருப்பு போராட்டத்தில் 38 மாவட்டங்களின் பங்களிப்புடன் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தோழர்கள் இரவு / பகலாக தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டது, அதிலும் குறிப்பாக பெருமளவிலான மகளிர் தோழர்களின் பங்களிப்பு இயக்கத்தின் மதிப்பினை பல மடங்கு உயர்த்தியுள்ளது என்றும், இத்தகைய எழுச்சிமிக்க போராட்டங்களை நடத்தி கோரிக்கைகளை வென்றெடுப்பதில் இதர துறைவாரி சங்கங்களுக்கெல்லாம் முன்னோடி சங்கமாக நமது அமைப்பு திகழ்வதாகவும் தெரிவித்தார். 11 நாட்கள் காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொண்டபோதிலும், ஊழியர்களுக்கு எவ்வித சிராய்ப்புமின்றி அனைவரும் பாதுகாப்பான முறையில் பணிக்கு திரும்பியதற்கு மாநில மையத்தின் சீரிய முயற்சியே காரணமாக அமைந்தது என்றும், உறுதிபட தெரிவித்தார்.

மாநில மையத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களை அனைத்து மாவட்ட மையங்களும் கறாராக அமுல்படுத்திய போதிலும், போராட்டத்தினால் அரசு நிருவாகத்திற்கு எவ்வித பாதிப்புமில்லாத வகையில் அனைத்து பணிகளும் முழுமையாக நடைபெற்றது நமது பலவீனத்தை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்ததாகவும், குறிப்பாக போராட்ட காலத்தில் வருவாய் நிருவாக ஆணையரால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டங்களில் ஒரு சில மாவட்டங்களைத் தவிர பெரும்பான்மையான மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலக மேலாளர்கள்(பொது) கலந்து கொண்டது போன்ற நிகழ்வுகள் இனி வரும் காலங்களில் நடைபெறக்கூடாது எனவும் தெரிவித்தார்.

இந்திய பாராளுமன்றத்திற்கான தேர்தல் தமிழகத்தில் எவ்வித சட்டம்/ஒழுங்கு பிரச்சனைகளுமின்றி அமைதியான முறையில் சிறப்பாக நடந்தேறியதற்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் பங்கு அளப்பரியது என்றும், பாராளுமன்ற தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு முழுமையான அளவில் ஒதுக்கீடு செய்யப்படாத நிலையிலும், பல்வேறு சிரமங்களுக்கிடையே வருவாய்த்துறை அலுவலர்கள் சிறப்பான முறையில் இந்த பணியினை மேற்கொண்டதற்கு மாவட்டங்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு தேர்தல் பணிக்கான நிதி ஒதுக்கீட்டினை முழுமையான அளவில் பெறுவதற்கு மாநில மையம் தொடர் முயற்சிகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு நிறைவையொட்டி எதிர்வரும் 2024ஆகஸ்ட் 2 & 3 தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ள வைர விழா மாநில மாநாட்டில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சரின் வருகை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் & இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் ஆகியோரை பங்கேற்க செய்திட மாநில மையத்தின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், மேலும் நமது இயக்கத்தின் 60ஆண்டு நிறைவை போற்றும் வகையில் தமிழகத்தின் பசுமைச்சூழலை அதிகரித்திடும் சிறு பங்களிப்பாக மாநிலம் முழுவதும் 60,000 மரக்கன்றுகளை நட்டு பராமரித்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் நீண்டகால

கோரிக்கையான வருவாய்த்துறை அலுவலர்களுக்கு 'மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்குதல்" என்ற ஒற்றை கோரிக்கையினை வலியுறுத்தும் சிறப்புமிக்க மாநாடாக இந்த வைர விழா மாநில மாநாடு திகழும் எனவும் தெரிவித்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் தற்போது பணிக்கலாச்சாரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதாகவும், பொதுமக்கள் மற்றும் அரசு மட்டத்தில் நமது துறையின்மீது கடுமையான அதிருப்தி நிலவுவதாகவும், எனவே இதனைக் களைந்து பொதுமக்கள் மத்தியில் நற்பெயற் ஈட்டிடும் வகையில் அலுவலர்களின் செயல்பாடுகள் இருக்க வேண்டுமெனவும், இதனை வலியுறுத்தி மாவட்ட மையங்கள் இளம் தலைமுறை அலுவலர்களுக்கு நமது துறையின் முக்கியத்துவம் மற்றும் மாண்பு ஆகியவை குறித்து குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆக்கப்பூர்வமான பயிற்சிகளை வழங்கிட உறுதியேற்றிட வேண்டுமெனவும், இதன் அடிப்படையில் மாவட்ட மையங்கள் தங்களது செயல்பாட்டினை மேலும் வேகப்படுத்துவதோடு, நமது துறையின் தொன்மம் மற்றும் முக்கியத்துவம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு பொதுமக்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதில் ஒவ்வொரு வருவாய்த்துறை அலுவலர்களும் உணர்வோடு பணியாற்றிட உறுதியேறக் வேண்டுமெனவும் தெரிவித்தார்.

சுமார் 500 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையான வரலாற்றைக் கொண்ட வருவாய்த்துறையின் சிறப்பு, தொன்மம் மற்றும் வருவாய்த் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொதுமக்கள் நலன் சார்ந்த இன்றியமையா பணிகள் ஆகியவற்றை நிணைவு கூர்ந்திடும் வகையில் ஒவ்வொரு ஆண்டும், பசலி ஆண்டின் தொடக்க நாளான ஜூலை 1ஆம் நாளை வருவாய்த்துறை (Revenue Day) தினமாக அனுசரித்திட முடிவு செய்யப்பட்டுள்ளது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த இராமநாதபுரம் மத்திய செயற்குழுவில் நமது ஸ்தாபனத்தின் அடிப்படை விதிகளை திருத்திட வைக்கப்பட்ட முன்மொழிவின் மீது மாவட்ட மையங்களால் ஒப்புதல் பெறப்பட்டுள்ள நிலையில் எதிர் வரும் வைர விழா மாநில மாநாட்டில் நமது ஸ்தாபன விதித்திருத்தங்கள் அமுல்படுத்தப்படுமெனவும், தற்போது வைர விழா மாநாட்டு பணிகள் முழுவீச்சில் தொடங்கப்பட்டிருப்பதால் மாநில நிருவாகிகளின் பதவிக் காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டித்திட வேண்டியதன் அவசியம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைர விழா மாநில மாநாட்டிற்கு மிகக் குறுகிய கால அளவே உள்ள நிலையில் இதுவரை 40% மாநாட்டு நிதி செலுத்தப்படாமல் மாவட்ட மையங்கள் நிலுவை வைத்துள்ளது என்றும், எனவே எதிர்வரும் 15.07.2024-க்கு முன்பாக அனைத்து மாவட்டங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை நிலுவை ஏதுமின்றி முழுமையாக செலுத்திட வேண்டுமெனவும், இதற்கு பொறுப்பு மாநில நிருவாகிகள் தக்க முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தற்போது பல்வேறு நிலைகளில் பணியிட பாதிப்பு அதிகமாக உள்ளதென்றும், இதனை சமாளித்திட அமைப்பை மேலும் வலிமைப்படுத்த வேண்டும் எனவும், பத்திற்கும் மேற்பட்ட பணி நிலையில் 14,000 உறுப்பினர்களை கொண்ட அமைப்பில் இதுவரை 6316 உறுப்பினர்களுக்கான இணைப்புக்கட்டணம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளதாகவும், எனவே 2024ம் ஆண்டில் ஒரு உறுப்பினர்கூட விடுதலின்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா, உள்ளிட்ட நிதி நிலுவைகளை முழுவதுமாக வசூல் செய்து 30.06.2024க்குள் செலுத்திட மாவட்ட மையங்கள் உறுதி ஏற்க வேண்டும் என்றும் உறுதிபடத் தெரிவித்தார்.

மாநில மையத்தின் அறிவுறுத்தலுக்கு இணங்க மிகக் குறுகிய காலத்தில் இச்சிறப்பு வாய்ந்த மத்திய செயற்குழு கூட்டத்தை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாவட்டத் தலைவர் திரு.க.அருள்மொழிவர்மன்,

மாவட்டச் செயலாளர் திரு.கோ.திருமால் மற்றும் மாவட்டப் பொருளாளர் திரு.ம.சிவக்குமார் உள்ளிட்ட அனைத்து மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களையும் வெகுவாக பாராட்டினார்.

பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் கடந்த கால நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக கடந்த 03.02.2024 அன்று நடைபெற்ற பெரம்பலூர் மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் மாநில மையத்தால் மேற்கொள்ளப்பட்ட இயக்க நடவடிக்கைகள் தொடர்பான வேலை அறிக்கையினை செயற்குழுவில் தாக்கல் செய்தார். பெரம்பலூரில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் கடந்த நான்கு மாத காலத்தில் மாநில மையத்தின் சிறப்பான செயல்பாடுகளின் மூலம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் நலன் சார்ந்த மூன்று அரசாணைகள் பெறப்பட்டுள்ளது என்றும், துறைவாரி சங்கங்களில் நமது ஸ்தாபனத்தைப் போன்று தொடர்ச்சியான இயக்க நடவடிவக்கைள் வேறு எந்த அமைப்புகளிலும் மேற்கொள்ளப்படுவது இல்லை என்றும், தெரிவித்தார்.

கடந்த கால நடவடிக்கைகளை பொறுத்த அளவில் கடந்த 03.02.2024ல் நடைபெற்ற பெரம்பலூர் மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் மூன்று மாத காலத்தில் 02.03.2024 அன்று திருவள்ளூரில் அவசர மத்திய செயற்குழு கூட்டம், 10 முறை மாநில நிருவாகிகள் கூட்டம் மற்றும் 04 முறை மாநில/மாவட்ட நிருவாகிகளின் ஆலோசனைக் கூட்டம் ஆகியவை நடத்தப்பட்டு ஆக்கப்பூர்வமான விவாதங்களின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும், கடந்த 08.05.2024 மற்றும் 15.05.2024 ஆகிய இரண்டு தினங்கள் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர் இராமச்சந்திரன் அவர்களை விருதுநகர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் சந்தித்து கடந்த 08.03.2024 அன்று அரசு மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது உறுதியளித்தபடி நிலுவைக் கோரிக்கைகளின் மீது விரைந்து ஆணைகள் வழங்கிட வலியுறுத்தப்பட்டது தொடர்பாக எடுத்துரைத்தார்.

மாநில மையத்தின் கடந்த கால நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க நிகழ்வாக காலவரையற்ற வேலை நிறுத்தம் தொடங்கிய முதல் நாளான 27.02.2024 அன்று 10205 வருவாய்த்துறை அலுவலர்கள் எழுச்சியுடன் கலந்து கொண்டதன் விளைவாக ஒட்டுமொத்த மாவட்ட நிருவாகமும் ஸ்தம்பித்தது என்றும், இப்போராட்டம் ஏற்படுத்திய தாக்கத்தினால் போராட்டத்தின் இரண்டாம் நாளில் நமது வாழ்வாதார கோரிக்கைகளில் முதன்மை கோரிக்கையான பணியிறக்க பாதுகாப்பு விதித்திருத்த அரசாணை வெளியிடப்பட்டது நமது இயக்கத்தின் போராட்ட நடவடிக்கைகளுக்கு கிடைத்த மிகப்பெரிய வரலாறு; சாதனையாக கருதப்படுகிறதென்றும், இதனைத் தொடர்ந்து கடந்த 01.03.2024, 07.03.2024 ஆகிய இரண்டு தினங்கள் வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் வருவாய்த்துறை செயலாளர் உள்ளிட்ட உயர் அலுவலர்களின் தலைமையில் நடைபெற்ற பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்த போதும் திருவள்ளூர் அவசர மத்திய செயற்குழு முடிவுகளின்படி தொடர்ச்சியாக 11 நாட்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது என்றும் தெரிவித்தார்.

03.02.2024 அன்று நடைபெற்ற பெரம்பலூர் மத்திய செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி வருவாய்த்துறை அலுவலர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும், துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தின் காரணமாக பணியிறக்கம் பெறும் அலுவலர்களின் பணிப்பாதுகாப்பினை உறுதி செய்து அரசாணை வெளியிடுதல், இளநிலை வருவாய் ஆய்வாளர் / முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித்திருத்த அரசாணை வெளியிடுதல் உள்ளிட்ட வருவாய்த்துறை அலுவலர்களின் 10 அம்ச வாழ்வாதார கோரிக்கைகளை உடன் நிறைவேற்றிட வலியுறுத்தி, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற நான்கு கட்ட போராட்டங்களை முழுமையாக வெற்றி பெறச் செய்திடும்

பொருட்டு 07.02.2024 முதல் 12.02.2024 வரை மாநில நிருவாகிகளின் பிரச்சார இயக்கம் அனைத்து மாவட்டங்களிலும் வெகு எழுச்சியாக நடைபெற்றது குறித்தும், இதன் விளைவாக நமது இயக்க வரலாற்றில் மைல்கல்லாக 13.02.2024 முதல் நான்கு கட்ட போராட்டங்கள் மாநிலம் முழுமைக்கும் மிக எழுச்சியாக நடத்தப்பட்டு மூன்று முக்கியத்துவம் வாய்ந்த அரசாணைகள் பெறப்பட்டுள்ளது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த 15.03.2024 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிச்செயலர் திரு.ப.உ.சண்முகம், இ.ஆ.ப., அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து நிலுவையிலுள்ள ஈப்பு ஒதுக்கீடு, இளநிலை/ முதுநிலை வருவாய் ஆய்வாளர் விதித்திருத்த அரசாணை வெளியிடுதல் மற்றும் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட அலுவலக உதவியாளர் காலிப் பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளின் மீது இதுவரை ஆணைகள் வழங்கப்படாமல் காலம் தாழ்த்தப்படுவதால் இதுகுறித்து தொடர்புடைய அலுவலர்களிடம் பேசி விரைந்து ஆணைகள் வழங்கிட வலியுறுத்தப்பட்டது குறித்தும், விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த 05.03.2024 மற்றும் 05.04.2024 ஆகிய இரண்டு தினங்கள் தமிழக தலைமைத் தேர்தல் அலுவலர் திரு.சத்யபிரதசாஹு, இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து 2024 பாராளுமன்ற தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்கு 75% நிதி ஒதுக்கீட்டினை அனைத்து மாவட்டங்களுக்கும் முன்கூட்டியே வழங்கிடக் கோரியும், வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபடுத்தப்படும் அலுவலர்களுக்கு குளிர்சாதன வசதி ஏற்படுத்திக் கொடுத்திட வலியுறுத்தப்பட்டது குறித்தும், மேலும் 2024 பாராளுமன்ற தேர்தல் பணிகளை மேற்கொள்ள மிகக் குறைந்த அளவிலான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதால் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வரும் வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்து வரும் பல்வேறு பிரச்சனைகள் குறித்தும், எனவே அவற்றை களைந்திட தேர்தல் ஆணையத்தின் மூலம் உரிய நடவடிக்கைகள் எடுத்திடுமாறு வலியுறுத்தப்பட்டது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

கடந்த கால நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக 30.05.2024 அன்று தமிழக அரசின் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.பு.அமுதா, இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் (TASMAC) தொகுப்பூதியத்தின் கீழ் மாவட்ட மேலாளர்களாக பணிபுரிந்து வரும் எம்.பி.ஏ., பட்டதாரிகளுக்கு பதிலாக அப்பதவியில் வருவாய்த்துறையைச் சேர்ந்த துணை ஆட்சியர்களை நியமனம் செய்திட வலியுறுத்தி முறையீடு அளித்து விரிவாக பேசப்பட்டது குறித்தும், கடந்த 19.02.2024, 05.04.2024, 15.05.2024 மற்றும் 30.05.2024 ஆகிய நான்கு தினங்கள் தமிழக அரசின் மனிதவள மேலாண்மைத்துறை செயலாளர் திரு.எஸ்.நாகராஜன்,இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து இளநிலை வருவாய் ஆய்வாளர்/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித்திருத்த அரசாணை மற்றும் இளநிலை உதவியாளர் / தட்டச்சர் ஆகியோருக்கு இடையே ஒருங்கிணைந்த முதுநிலை நிர்ணயம் செய்திடுவது தொடர்பான அரசாணை ஆகியவற்றை விரைந்து வெளியிட வலியுறுத்தி முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் கடந்த 13.06.2024 அன்று தமிழக அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சத்யபிரதாசாஹு, இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் 60ஆம் ஆண்டு வைர விழா மாநாட்டின் சிறப்பு நிகழ்வாக தமிழகத்தின் பசுமைச்சூழலை அதிகரித்திடும் பொருட்டு, தமிழகம் முழுவதும் 60000 மரக்கன்றுகள் நட்டு பராமரித்திட முடிவு செய்யப்பட்டுள்ளதால், மேற்படி எண்ணிக்கையிலான மரக்கன்றுகளை இலவசமாக வழங்கிட வலியுறுத்தப்பட்டதன் அடிப்படையில் 60800 மரக்கன்றுகள் இலவசமாக அளித்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது குறித்தும் எடுத்துரைத்தார்.

பெரம்பலூர் மத்திய செயற்குழுவிற்கு பின்னர் நான்கு மாத காலத்தில் கடந்த 06.02.2024, 12.02.2024, 19.02.2024, 15.03.2024, 05.04.2024, 25.04.2024, 15.05.2024, 30.05.2024, 12.06.2024 மற்றும் 13.06.2024 ஆகிய 10 நாட்கள் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., தமிழக அரசின் வருவாய்த்துறை செயலாளர் திரு.இராஜாராமன், இ.ஆ.ப., மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்/கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) முனைவர்.எஸ்.நடராஜன், இ.ஆ.ப., ஆகியோரைச் சந்தித்து இளநிலை/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித்திருத்த அரசாணை வெளியிடுதல் உள்ளிட்ட வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளின் மீது ஆணைகள் வெளியிடப்படாமல் தொடர்ந்து காலதாமதம் செய்து வருவதால் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் கடும் நெருக்கடியுடன் பணிபுரிந்து வருவது குறித்து எடுத்துரைத்தும், எனவே நீண்டகால கோரிக்கைகளின் மீது விரைந்து ஆணைகள் வழங்கிட மாநில மையத்தின் சார்பில் அழுத்தம் கொடுக்கப்பட்டது குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் போராட்ட வரலாற்றில் கடந்த 27.02.2024 முதல் 11 நாட்கள் நடைபெற்ற எழுச்சியான காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டம், இளம் தலைமுறையினரிடம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதனால் சங்கத்தின் வளர்ச்சி அடுத்தக்கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளதாகவும் எடுத்துரைத்தார். மிகச்சிறிய மாவட்டமாக இருந்தாலும், மாநில மையத்தின் கோரிக்கையினை ஏற்று இச்சிறப்பு வாய்ந்த மத்திய செயற்குழு கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்து முடித்துள்ள திருப்பத்தூர் மாவட்ட/வட்டக்கிளை நிருவாகிகள் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் மாநில மையத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் பெரம்பலூர் மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்னர் கடந்த நான்கு மாதங்களில் வரப்பெற்ற உறுப்பினர் இணைப்புக் கட்டணம், சங்கக்குரல் சந்தா, மாநில மையக் கட்டட நிதி, சேலம் மாநாட்டு நிதி, TNGEA மாநாட்டு நிதி, 2023ம் ஆண்டிற்கான நாட்காட்டி & நாட்குறிப்பு நிதி மற்றும் வைர விழா மாநில மாநாட்டு நிதி, உள்ளிட்ட அனைத்து நிதி நிலுவை இனங்கள் தொடர்பான அறிக்கையினை செயற்குழுவில் தாக்கல் செய்தார்.

இம்மத்திய செயற்குழுவில் விழுப்புரம், திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கவில்லை. இதர 35 மாவட்டங்களின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள்/நிருவாகிகளின் செழுமையான கருத்துக்கள், ஆக்கபூர்வமான விவாதங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக இயற்றப்பட்டன.

தீர்மானம் 01

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைர விழா ஆண்டினை முன்னிட்டு, மாநில மாநாட்டினை எதிர்வரும் ஆகஸ்ட் 2 & 3 தேதிகளில் சென்னையில் சிறப்பாக நடத்துவதென்றும், மாநிலம் முழுவதிலுமிருந்து 10000த்திற்கும் மேற்பட்ட வருவாய்த்துறை அலுவர்கள் பங்குபெறும் இம்மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள் மற்றும் தொழிற்சங்க தலைவர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைப்பது என்றும் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 02

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வரலாற்று சிறப்பு வாய்ந்த வைர விழா ஆண்டினை முன்னிட்டு, தமிழகத்தின் பசுமைச்சூழலை (Global Cover) அதிகரித்திடவும், உலக வெப்பமயமாதலை (Global Warming) குறைத்திடவும், சிறு பங்களிப்பாக தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில்

மாநிலம் முழுவதும் 60,000 மரக் கன்றுகளை நடுவது என்றும், இம்மாநாட்டின் சிறப்பை குறித்திடும் வகையில் சிறப்பு தபால் உரை (Special Postal Cover) வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 03

அனைத்து துறைகளுக்கும் தாய் துறையாக விளங்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் பாரம்பரியம், தொன்மை மற்றும் இன்றியமையாத பணிகளைப் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை முதல் நாளை (பசலி ஆண்டின் தொடக்கம்) வருவாய்த்துறை தினமாக (Revenue Day) அனுசரிப்பது என ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 04

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணியாளர்களின் நலன் சார்ந்த பொதுவான கோரிக்கைகளை வென்றெடுத்திடும் பொருட்டு ஒத்த கருத்துடைய அங்கீகரிக்கப்பட்ட வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கத்துடன் (கிராம நிருவாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் சங்கங்களை ஒருங்கிணைத்து) வருவாய்த்துறை அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பினை ஏற்படுத்துவது என்றும், இக்கூட்டமைப்பிற்கான பொது செயல் திட்டங்களை (Common Minimum Programme) வகுத்திட இம்மாத இறுதிக்குள் கூட்டத்தை தமிழகத்தின் மையப் பகுதியில் ஏதாவதொரு மாவட்டத்தில் கூட்டுவது என்றும் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 05

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் பெரும் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர், உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர் மாற்றம் செய்து 2016ம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு 8 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் இதுவரை விதித்திருத்தம் வெளியிடப்படாததால் அரசாணையினை நடைமுறைப்படுத்திட இயலவில்லை. இதனால் மேற்கண்ட அரசாணை வெளியிடப்பட்டும், பயன்பாடற்ற நிலையில் கிடப்பில் போடப்பட்டுள்ளது. எனவே இதில் மேலும் காலம் தாழ்த்தாது 30.06.2024க்குள் அரசாணை வெளியிட தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 06

இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகியோருக்கிடையே ஒருங்கிணைந்த பணி முதுநிலை நிர்ணயிப்பது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளது. இதனால் அவர்களுக்கிடையே ஒருங்கிணைந்த முதுநிலை நிர்ணயம் செய்து, முதுநிலை வருவாய் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இவ்வினத்தில் மனிதவள மேலாண்மைத்துறை மூலமாக வழக்குகளை விரைந்து முடிவு செய்திட நடவடிக்கை மேற்கொண்டு உரிய தெளிவுரைகளை உடனடியாக வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 07

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் இயற்கை சீற்றம், சட்டம்/ஒழுங்கு பராமரித்தல், முக்கிய பிரமுகர்கள் வருகை, பல்வேறு வகையிலான நலத்திட்ட உதவிகளை பொதுமக்களுக்கு வழங்குதல் மற்றும் சட்டமன்ற / பாராளுமன்ற தேர்தல் பணிகள் உள்ளிட்ட அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணிகளை இரவு / பகல் பாராது விடுமுறை தினங்களில் கூட தொடர்ந்து 24 மணி நேரமும் மேற்கொண்டு வருகின்றனர். எனவே இவர்களின் பணிப்பளு மற்றும் பணித்தன்மையினை

கருத்தில் கொண்டு அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் மற்றும் தனி ஊதியம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 08

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் காலியாக உள்ள மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பிட விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு உரிய ஆணைகள் வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 09

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் தற்போது மிகுந்த பணி நெருக்கடியுடன் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பல்வேறு சான்றிதழ்கள் கோரி மிகுதியான அளவில் வரப்பெறும் மனுக்களை விரைவாக முடிவு செய்திடும் பொருட்டு பொது மக்களின் நலன் கருதி “முதல்வரின் முகவரி” மற்றும் பொது மக்களுக்கான சான்றிதழ் வழங்கிடும் பணிக்கென அனைத்து வட்டத்திற்கும் தலா ஒரு சிறப்பு துணை வட்டாட்சியர் பணியிடம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 10

பேரிடர் காலங்களில் மக்களின் உயிரை காக்கக்கூடிய பல்வேறு பணிகளை மேற்கொண்டு வரும் பேரிடர் மேலாண்மைப் பிரிவில் செயல்பட்டு வந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களை கடந்த 31.03.2023 முதல் கலைத்து ஆணையிடப்பட்டுள்ளதை இரத்து செய்து, கலைக்கப்பட்ட 97 பணியிடங்களையும் மீண்டும் உருவாக்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 11

2024 பாராளுமன்ற தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்கு மிகக் குறைந்த அளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனால் அவசர தேர்தல் செலவினங்களை மேற்கொள்ளும் பொருட்டு தேர்தல் நடத்தும் அலுவலர்கள் பல்வேறு இடங்களில் கடன்களைப் பெற்று தேர்தல் பணிகளை மேற்கொண்டுள்ளனர். மேலும் தேர்தல் முடிந்து ஒரு மாதகாலமாக இதுவரை நிதி ஒதுக்கீடு வழங்கப்படாததால், தேர்தல் செலவினங்களை மேற்கொண்ட வட்டாட்சியர்கள் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். எனவே நிலுவையிலுள்ள நிதி ஒதுக்கீட்டினை மேலும் காலம் தாழ்த்தாது உடன் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசு முதன்மைச் செயலாளர்/முதன்மைத் தேர்தல் அலுவலரை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 12

தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் (TASMAC) உள்ள 16 மாவட்ட மேலாளர் பணியிடங்களில் எம்.பி.ஏ. பட்டதாரிகளை தொகுப்பூதியத்தின் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்நியமனத்தில் நடைமுறையிலுள்ள சட்ட விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை. எனவே ஏற்கனவே உள்ள நடைமுறையைப் பின்பற்றி இப்பணியிடங்களில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையைச் சார்ந்த துணை ஆட்சியர்களை நியமித்திட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 13

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியர் திரு.மனோஜ் முனியன் என்பவரை விதிகளுக்கு புறம்பாக தற்காலிக பணிநீக்கம் செய்ததை ரத்து செய்திட வலியுறுத்தி அறவழியில்

போராட்டம் நடத்திய வருவாய்த்துறை அலுவலர்கள் மீது கடுமையான பிரிவுகளின் கீழ் புனையப்பட்டுள்ள பொய் வழக்குகளை ரத்து செய்திட வலியுறுத்துவதென்றும், அவ்வாறு இல்லாத பட்சத்தில் தொடர் இயக்க நடவடிக்கைகளை திட்டமிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 14

தமிழகத்தில் கடந்த 2008ம் ஆண்டிற்கு முன்பாக ஏற்படுத்தப்பட்ட சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட 6 மாநகராட்சிகளில் பணிபுரிந்து வரும் அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி (City Compensatory Allowance) வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு பின்பாக தரம் உயர்த்தப்பட்டுள்ள தாம்பரம், கடலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், நாகர்கோவில், கரூர், ஓசூர், தஞ்சாவூர், கும்பகோனம், தூத்துக்குடி, திருப்பூர், ஆவடி, வேலூர் மற்றும் சிவகாசி உள்ளிட்ட 15 மாநகராட்சிகளில் பணிபுரிந்து வரும் அரசு அலுவலர்களுக்கு இதுவரை நகர ஈட்டுப்படி வழங்கப்படவில்லை. ஆனால் இந்த மாநகராட்சிகளில் வீட்டு வரி , தண்ணீர் வரி மற்றும் சொத்து வரி உள்ளிட்ட அனைத்து வரிகளும் பல மடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. எனவே இவற்றை ஈடு செய்திடும் விதமாக மேற்கண்ட 15 மாநகராட்சிகளில் பணிபுரிந்து வரும் அரசு ஊழியர்களுக்கும் நகர ஈட்டுப்படியை (City Compensatory Allowance) உடனடியாக வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 15

ஒருங்கிணைந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் முதுநிலை நிர்ணயித்தல் தொடர்பாக தேனி, மதுரை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களை நேரடி விசாரணை மேற்கொண்டு, வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவு கடந்த ஈராண்டுகளுக்கு மேலாக அரசிடம் நிலுவையில் உள்ளது. இதன்மீது விரைந்து உரிய ஆணைகள் பிறப்பித்திட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 16

புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில் கடந்த 04.04.2012 அன்று முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அதிக அளவிலான காலிப்பணியிடங்கள் இருந்தும், உரியகாலத்தில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. இதனால் பட்டியலில் இடம்பெற்றிருந்த அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை சரிசெய்திடக் கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசிடம் கடந்த ஈராண்டிற்கும் மேலாக நிலுவையில் உள்ளது. எனவே இதன் மீது விரைந்து ஆணை பிறப்பித்திட வருவாய்த்துறை செயலாளரை வலியுறுத்துவனெ முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 17

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் மாவட்ட வருவாய் அலகுகளில் தேர்தல் பணியில் ஈடுபட்டு வரும் தற்காலிக இளநிலை உதவியாளர்களின் வயது, பணிமூப்பு, பணித்தன்மை மற்றும் குடும்ப சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு தொடர்ந்து இப்பணியிடத்தில் பணிபுரிந்திட அனுமதித்திடுமாறும், மேலும் இவர்களது பணியினை நிரந்தரப்படுத்திட தமிழக அரசுக்கு உரிய முன்மொழிவினை அனுப்பி ஆணைகள் பெற்றுத்தர உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழக முதன்மைத் தேர்தல் அலுவலர் வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 18

தமிழகத்தில் செயல்பட்டு வரும் வெளிநாட்டு மதுபானம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் (India and made Foreign Liquor Factories) மற்றும் வடிப்பக ஆலைகளில் (Distillery Units) ஆகியவற்றில் கடந்த

20 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற மதுபான உற்பத்தியைவிட தற்போது பன்மடங்கு உற்பத்தி கூடுதலாக நடைபெறுகிறது. ஆனால் இந்நிறுவனங்களில் குறைந்த அளவிலான வருவாய்த்துறை அலுவலர்களே பணிபுரிந்து வருகின்றனர். எனவே இவர்களின் பணிப்பளுவினை கருத்தில் கொண்டும், தவறான பயன்பாடுகளை தடுத்திடும் வகையிலும், கூடுதலாக மேற்கொள்ளப்பட்டு வரும் உற்பத்தித் திறனிற்கேற்ப புதிய வட்டாட்சியர்/துணை வட்டாட்சியர் பணியிடங்களை ஏற்படுத்திட உள்துறை செயலாளர் அவர்களை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 19

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் கடந்த 02.02.2016, 03.02.2016, 21.02.2016, 04.10.2018 ஆகிய 04 நாட்கள் நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தம், 27.02.2024 முதல் 08.03.2024 வரை 11 நாட்கள் நடைபெற்ற காலவரையற்ற வேலை நிறுத்தம் மற்றும் 08.01.2019 & 09.01.2019 தேதிகளில் 02 நாட்கள் நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தம் உள்ளிட்ட 17 நாட்களை பணிக்காலமாக வரன்முறை செய்து ஆணை வழங்கிட தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென முடிவு செய்யயப்பட்டது.

தீர்மானம் 20

தமிழக அரசின் அனைத்து துறைகளில் பணிபுரிந்துவரும் பார்வைத்திறன்/செவித்திறன் குறைபாடுடைய அலுவலர்களுக்கு பவானிசாகர் அடிப்படை பயிற்சியிலிருந்து ஏற்கனவே விலக்களித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைப்போன்றே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில், பார்வைத்திறன்/செவித்திறன் குறைபாடுடைய வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஒரத்தநாடு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட பயிற்சியிலிருந்து விலக்களித்து முதுநிலை வருவாய் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 21

தமிழக அரசின் துறைகளில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அதிகமான பணியாளர்களைக் கொண்டதும், அரசின் நலத் திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்த்திடும் கேந்திரியமான துறையாகும். இத்துறையில் கிராம உதவியாளர் முதல் மாவட்ட வருவாய் அலுவலர் வரை 60,000த்திற்கும் மேற்பட்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்களின் பணி நியமனம் முதல் பணி ஓய்வு வரையிலான மேல்முறையீடு தொடர்பான பணிகள் அனைத்தும் வருவாய் நிருவாக ஆணையரகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இத்துறையின் பணியாளர்கள் தினந்தோறும், தங்களது கோரிக்கைகளுக்காக தமிழகத்தின் தொலைதூர மாவட்டங்களிலிருந்து மிக நீண்ட தூரம் பயனம் செய்து வருவாய் நிருவாக ஆணையரகத்திற்கு வந்து செல்வதால், மிக அதிகமான பொருட்செலவும், கால விரையமும் ஏற்படுகின்றன. எனவே இத்துறையின் முக்கியத்துவம், ஊழியர்களின் நலன் மற்றும் நிருவாக நலன் கருதி சென்னையில் உள்ளது போன்று மதுரை, திருச்சி மற்றும் கோயம்பத்தூர் ஆகிய மூன்று மாவட்டங்களைத் தலைமையிடமாகக் கொண்டு மூன்று மண்டல இணை ஆணையர் அலுவலகங்களை (Regional Joint Commissioner of Revenue Administration) புதியதாக ஏற்படுத்திட தமிழக அரசினை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 22

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பணிபுரிந்து வரும் குறுவட்ட வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் உள்ளிட்ட அலுவலர்கள் தங்களது களப்பணிகளுக்காக நாள்தோறும் பல்வேறு இடங்களுக்கு இருசக்கர வாகனங்களில் நீண்ட தூரம் பயனம் செய்து தங்களது

முகாம் தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் வாகன எரிபொருள் செலவு உள்ளிட்ட அத்தியாவசிய செலவுகளை அதிகமான அளவில் மேற்கொண்டு வருகின்றனர். எனவே இத்துறையில் பணிபுரியம் குறுவட்ட வருவாய் ஆய்வாளர் மற்றும் மண்டல துணை வட்டாட்சியர் ஆகியோரின் இருசக்கர வாகணங்களுக்கு மாதத்திற்கு தலா 40 லிட்டர் எரிபொருள் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 23

தமிழக அரசுத்துறைகளில் கருணை அடிப்பபடை பணி நியமனத்திற்கான உச்சவரம்பு 25% என இருந்ததை தற்போது 5% ஆக குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டு, கருணை அடிப்படை பணி நியமனம் என்பதே முற்றிலும் இல்லாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே இதனை ரத்து செய்து மீண்டும் 25% ஆக நிர்ணயம் செய்திட தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவனெ முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 24

சமீபத்தில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில், ஆளும் திராவிட முன்னேற்ற கழக அரசு அனைத்து தொகுதிகளையும் வென்றுள்ள நிலையில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை இரத்து செய்து, அனைவருக்கும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்திடவும், கொரோனா பெருந்தொற்றின் காரணமாக நிறுத்தம் செய்யப்பட்ட ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு ஊதியத்தினை மீள வழங்கிட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வலியுறுத்துவனெ ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 25

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தை மேலும் வலுப்படுத்திட 2024ம் ஆண்டிற்கான உறுப்பினர் சேர்க்கை மற்றும் சங்கக் குரல் சந்தா சேகரிப்பு இயக்கத்தை அனைத்து மாவட்டம், நகரம் மற்றும் வட்டக் கிளைகளில் உடன் தொடங்குவது என்றும், உறுப்பினர் இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா ஆகியவற்றை 100% நிறைவு செய்து 30.06.2024 இறுதிக்குள் தவறாது செலுத்திட அனைத்து மாவட்டங்களையும் வலியுறுத்துவதெனவும், மேலும், சென்னை தலைமையக கட்டட நிதி நிலுவை, வைர விழா மாநாட்டு நிதி, 2023 & 2024 நாட்காட்டி மற்றும் நாட்குறிப்பு நிதி உள்ளிட்ட அனைத்து நிதி நிலுவை இனங்களையும், இம்மாத இறுதிக்குள் செலுத்திடுமாறு மாவட்ட மையங்களை வலியுறுத்தவதென முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 26

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் திரு.இரா.மங்களபாண்டியன் அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதால் தன்னை மாநிலத் துணைத்தலைவர் பொறுப்பிலிருந்து விடுவித்திடுமாறு தெரிவித்து இராஜினாமா கடிதம் கொடுத்துள்ளார். அன்னாரின் உடல் நலனைக் கருத்தில் கொண்டு அவர் வகித்து வந்த மாநிலத் துணைத்தலைவர் பொறுப்பிலிருந்து விடுவித்து, வைர விழா மாநில மாநாடு நிறைவு பெறும் வரை பணிகளைத் தொடர்வது என்றும், அதன்பின்பாக அவர் பொறுப்பு வகித்து வந்த மாவட்டங்களுக்கு பின்வரும் விவரப்படி பொறுப்பு மாநில நிருவாகிகள் கூடுதல் பொறுப்பு வகித்திடுவதென்றும் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| 1 எம்.பி.முருகையன், மாநிலத் தலைவர் | கன்னியாகுமரி |
| 2 சு.சங்கரலிங்கம், பொதுச் செயலாளர் | திருநெல்வேலி |
| 3 வெ.சோமசுந்தரம், மாநிலப் பொருளாளர் | தஞ்சாவூர் |

தீர்மானம் 27

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தற்போதைய மாநில நிருவாகிகளின் பதவிக்காலம் ஜூன் 2024ல் முடிவடைந்துவிட்டது. ஆனால் வைர விழா மாநில மாநாட்டு பணிகள் தற்போது முழுவீச்சில் தொடங்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டு மாநாட்டு பணிகளை நிறைவு செய்திடும் பொருட்டு, தற்போதைய மாநில நிருவாகிகளின் பதவிக் காலத்தை மேலும் 06 மாதங்களுக்கு நீட்டிப்பது என்றும், வைர விழா மாநில மாநாட்டிற்கு பின்னர் 15.08.2024ஐ மைய நாளாகக் கொண்டு மாவட்டங்களில் உறுப்பினர் பட்டியலைப் பெற்று மாநில நிருவாகிகளுக்கான தேர்தலை நடத்தி முடித்திட தேர்தல் ஆணையராக சென்னை மாவட்ட வருவாய் அலகினைச் சேர்ந்த வட்டாட்சியர் திரு.இராமு, அவர்களையும், துணைத் தேர்தல் ஆணையர்களாக சென்னை மாவட்ட வருவாய் அலகினைச் சேர்ந்த வட்டாட்சியர் திரு.அப்பாஸ் மற்றும் திருவள்ளூர் மாவட்ட வருவாய் அலகினைச் சேர்ந்த துணை வட்டாட்சியர் திரு.ஜெய்கர் பிரபு ஆகியோரையும் நியமித்திட ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

தீர்மானம் 28

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைர விழா மாநில மாநாட்டில் அனைத்து மாவட்டத்தைச் சேர்ந்த 14000 உறுப்பினர்களும் முழுமையாக பங்கெடுத்திட வலியுறுத்தி அனைத்து மாவட்டங்களிலும் 01.07.2024 முதல் மாநில நிருவாகிகள் பங்கேற்கும் தீவிரமான பிரச்சார இயக்கங்களை நடத்திடுவதெனவும், இதற்கான திட்டமிடலை மாவட்ட மையங்கள் & பொறுப்பு மாநில நிருவாகிகள் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

இறுதியாக, மாநில பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் அவர்கள் இச்சிறப்பு வாய்ந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்த திருப்பத்தூர் மாவட்ட நிர்வாகிகளுக்கும், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

| | |
|---|---|
| ஒம்/- | ஒம்/- |
| (சு.சங்கரலிங்கம்) | (எம்.பி.முருகையன்) |
| பொதுச் செயலாளர், | மாநிலத் தலைவர் |




ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1ஆம் நாள் வருவாய்த்துறை தினமாக அனுசரிப்பது என முடிவு செய்யப்பட்டு, முதலாம் ஆண்டு Revenue Day மாநிலம் முழுவதும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.


உண்மை..!
உழைப்பு..!
உயர்வு..!
TNROA
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
மாநில மையம்
12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
வைரவிழா ஆண்டு 1964 - 2024
16 -ஆம்
மாநில மாநாடு
TNROA
அழைப்பிதழ்
நாள் : 2-08-2024 மற்றும் 3-08-2024
சென்னை.

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

TNROA

## மாநில மையம்

பேரன்புடையீர்,

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் வைரவிழா ஆண்டு 16–ஆம் மாநில மாநாடு தமிழகத்தின் தலைநகர் சென்னையில் நடைபெற உள்ளது. வருவாய்த்துறை அலுவலர்களின் உரிமை காக்கும், பாதுகாக்கும் அமைப்பான தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம், அனைத்து அரசு ஊழியர்களின் பொருளாதார சமூக முன்னேற்றத்திற்காகவும், ஏழை எளிய மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காகவும் தொடர்ந்து போராடி வருகின்றது.

வைரவிழா ஆண்டில், காலிப்பணியிடங்களை நிரப்புதல், பங்களிப்பு ஓய்வூதியத்தை இரத்து செய்தல், ஈட்டிய விடுப்பு ஒப்படை ஊதியம் வழங்குதல், அனைத்து நிலை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம் தனி ஊதியம் வழங்குதல், பொது மக்களுக்கு தேவையான பணிகளை திறம்பட மேற்கொள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட வாழ்வாதார கோரிக்கைகளை வென்றெடுக்க இம்மாநாட்டில் அனைவரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– வரவேற்புக்குழு –

## நிகழ்ச்சி நிரல்

**நாள் : 2.08.2024 வெள்ளிக்கிழமை, காலை 9.00 மணி**

## பிரதிநிதிகள் மாநாடு

(தோழர். ச.முருகதாஸ் அரங்கம்) JMA ஹால், சூளை, சென்னை – 112

சங்க கொடியேற்றுதல் மற்றும் தியாகிகளுக்கு அஞ்சலி

**தலைமை**

**எம்.பி. முருகையன்,** மாநிலத்தலைவர்

**வரவேற்புரை**

**கு. வெங்கடேசன்,** வரவேற்புக்குழு தலைவர்,
தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கம்

**தொடக்கவுரை**

**ஆ. செல்வம்,** பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**வேலை அறிக்கை**

**சு. சங்கரலிங்கம்,** பொதுச் செயலாளர்

**நிதிநிலை அறிக்கை**

**வெ. சோமசுந்தரம்,** மாநிலப் பொருளாளர்

- அறிக்கையின் மீது விவாதம் -

## வாழ்த்துரை

**பிரதிநிதித்துவ மாநாடு, 2.08.2024**

**சு.ஹரிசங்கர்,** செயலாளர்,
தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம்.

**ச.பாரி,** பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை
அலுவலர்கள் சங்கம்

**தி.ம.இராஜன் சேதுபதி,**
மாநிலத் தலைவர்
தமிழ்நாடு கிராம நிருவாக அலவலர் சங்கம்

**ந.சுரேஷ்,** பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர் சங்கம்

**இரா.அழகிரிசாமி,** மாநில தலைவர்
தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள்
முன்னேற்ற சங்கம்

**அன்னா. குபேரன்,**
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு

**ஆர்.திருமலைவாசன்,**
மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கம்

**பி.வி.ஆனந்த்,** துணைத் தலைவர்,
த.நா. வருவாய் நிருவாகம்
ஆணையரக அலுவலர் சங்கம்.

**ஓய்வு பெற்ற, பதவி உயர்வில் சென்ற முன்னாள் மாநில நிர்வாகிகளுக்கு**

# பாராட்டு விழா

# கருத்தரங்கம்

**நாள் : 2.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி**

**தலைமை**

**கு. குமரேசன்,** மாநில துணைத் தலைவர்

**வரவேற்புரை**

**சு. பார்த்திபன்,** மாநிலச் செயலாளர்

**கருத்துரை**

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

"சொற்கோ" **பாரதி கிருஷ்ணகுமார்** எழுத்தாளர் & இயக்குனர்

**நன்றியுரை**

**ஆர்.எஸ். இராஜகோபால்,** மாநிலத் துணைத் தலைவர்

**பிரதிநிதித்துவ மாநாடு 3.08.2024 பிற்பகல் 1.30 மணி வரை தொடரும்**

# நூல் வெளியீட்டு விழா

**நாள் : 3.08.2024 சனிக்கிழமை காலை 11.00 மணி**

**“அரசு ஊழியர் இயக்க வரலாறு”**

ஆசிரியர் : **கே. இராஜ்குமார்,**
மேனாள் பொதுச் செயலாளர்

நூல் வெளியிடுபவர் : **எஸ். சுடலையாண்டி,**
மேனாள் மாநிலத் தலைவர்

நூல் பெறுபவர் : **எஸ். சிவக்குமார்,**
மேனாள் மாநிலத் தலைவர்

## தீர்மானங்கள் முன்மொழிதல்

**கு. குமரேசன், ஆர். மங்களபாண்டியன்,**
**ஏ. மணிகண்டன், வெ. அர்த்தனாரி, ஆர்.எஸ். இராஜகோபால்,**
மாநிலத் துணைத் தலைவர்கள்

**சு. பார்த்திபன், எம்.எஸ். அன்பழகன்,**
**மு.சுப்பு, ஆ.தமிழரசன், பி. செந்தில்குமார், ட்டி.டி. ஜோஷி**
மாநிலச் செயலாளர்கள்

**நன்றியுரை : ம. கார்த்திகேயன்,** வரவேற்புக்குழு செயலாளர்

## தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம், மாநில மையம் புதிய இணையதளத்தை தொடங்கி வைப்பவர்

**ஏ.வி. செல்வராஜ், த. டியூக் பொன்னுராஜ்,**
மேனாள் மாநிலத் தலைவர்கள்

**மாநாடு மலர் வெளியீடு**

**வெளியிடுபவர் :**
**கே. முருகன்,**
மேனாள் பொதுச் செயலாளர்

**பெற்றுக்கொள்பவர் :**
**கே.சி. ராம்குமார்,**
மேனாள் மாநிலத் தலைவர்

**நாள் : 3.08.2024 சனிக்கிழமை, பிற்பகல் 3.00 மணி**

## கோரிக்கை முழக்கப் பேரணி

பேரணி தொடங்கி வைத்தல் :

**த.சிவஜோதி,**
மேனாள் பொதுச் செயலாளர்

**ஜி.இளங்கோவன்,**
மேனாள் மாநிலப் பொருளாளர்.

# பொது மாநாடு

**நாள் : 3.08.2024 சனிக்கிழமை மாலை 5.00 மணி**

கலைவாணர் அரங்கம், சேப்பாக்கம், சென்னை.

தலைமை :

**எம்.பி. முருகையன்,** மாநிலத்தலைவர்

வரவேற்புரை :

**எம். ராமு,** மாவட்டத் தலைவர், சென்னை.

தீர்மானங்கள் விளக்கவுரை :

**சு. சங்கரலிங்கம்,** பொதுச் செயலாளர்

சிறப்புரை

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்

## கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்

**முனைவர். நடராஜன், இ.ஆ.ப.,**
கூடுதல் ஆணையர்,
வருவாய் நிருவாக ஆணையரகம்

**வி.இராஜாராமன், இ.ஆ.ப.,**
அரசு செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

**எம்.சண்முகம்,**
மாநிலங்களவை உறுப்பினர்,
தலைவர், தொழிலாளர் முன்னேற்ற கூட்டமைப்பு

**அ.சவுந்தரராஜன்,**
தலைவர் சி.ஐ.டி.யு தமிழ் மாநிலக் குழு

**ஸ்ரீ குமார்,**
பொதுச் செயலாளர், அகில இந்திய மாநில
அரசு ஊழியர் சம்மேளம். AISGEF

**மு.அன்பரசு,**
மாநிலத் தலைவர்,
தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

நன்றியுரை : **வெ. சோமசுந்தரம்,** மாநிலப் பொருளாளர்.


தலைநகர் நோக்கி முன்னேறுவோம்...!
மேம்படுத்தப்பட்ட ஊதியம் என்ற இலக்கினை வென்றெடுப்போம்...!
தொடங்கிய யாவும் முடிந்தே தீரும்,
காலங்கடந்தாலும் அது நடந்தே தீரும்...
TNROA
வருவாய்த்துறை பேரினமே ...!
அலைகடலென ஆர்ப்பரிப்பீர் ...! அணிதிரள்வீர் ...!

# பஞ்சமி நிலம் மீட்பு

19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் “படியாள்” என்கிற பெயரில் தாழ்த்தப்பட்ட மக்கள், உயர்சாதி நிலச்சுவான்தாரர்களின் நிலங்களில் விலங்குகளைப் போல் உழைக்கக் கட்டாயப்படுத்தினர். இந்த இழிநிலை நீங்க வேண்டுமெனில், அரசுக்கு சொந்தமான தரிசு நிலங்களைத் தலித் மக்களுக்கு வழங்க முன்வர வேண்டும் என்று அயோத்திதாச பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன் போன்ற தலித் தலைவர்கள் ஆங்கில ஆட்சியாளர்களிடம் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனிடையே அப்போதைய செங்கல்பட்டு மாவட்டத்தின் பொறுப்பு ஆட்சியராக இருந்த ஜேம்ஸ் ஹென்றி அப்பர்லே திரமென்ஹீர், 1891இல் பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு இந்தக் கோரிக்கைக்கு ஆதரவாக அறிக்கை ஒன்றை அனுப்பினார். அந்த அறிக்கையைப் பரிசீலித்த பிரிட்டன் நாடாளுமன்றம் 1892 செப்டம்பர் 30 ஆம் நாள், தலித் மக்களுக்கு இலவசமாக நிலம் வழங்க வேண்டியதற்கான தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் தமிழகத்தின் சில மாவட்டங்களில் குறிப்பாக செங்கல்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் (தற்போதைய திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்கள்) வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அரசுக்குச் சொந்தமான சுமார் 12 லட்சம் ஏக்கர் தரிசு நிலம் இலவசமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டது. பஞ்சத்தின் பிடியில் சிக்குண்டு நலிந்து வாழ்ந்துவந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டமையால் இந்நிலங்கள், “பஞ்சமி நிலங்கள்” என அழைக்கப்பட்டன. ஆங்கிலேயர்கள் அதை D.C.Land (Depressed Class Land) என அழைத்தனர். பஞ்சமி நிலங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டபோது, ‘தாழ்த்தப்பட்ட மக்கள் அந்நிலத்தினை குத்தகைக்கு விடுவதோ, தானமாக எவர்க்கும் தரவோ இயலாது. முதல் 10 ஆண்டுகளுக்கு எவருக்கும் விற்பனை செய்யலாகாது, 10 ஆண்டுகளுக்குப் பிறகு வேண்டுமானால், இன்னொரு தாழ்த்தப்பட்ட சமூகத்தவருக்கு மட்டுமே அதனை விற்காலம், பிறருக்கு விற்பது சட்டப்படி செல்லாது” என நிபந்தனைகளும் விதிக்கப்பட்டன.

எனினும், நாளடைவில் தாழ்த்தப்பட்ட மக்களின் அறியாமை, ஏழ்மை நிலையைப் பயன்படுத்தி, பிற சமூகத்தவர் நேரடியாகவோ மறைமுகமாகவோ பஞ்சமி நிலத்தை அவர்களிடமிருந்து பெற்று தமக்கு உரிமையுள்ளதாக மாற்றிக்கொண்டனர்.

பஞ்சமி நிலங்கள் மீட்கப்பட்டு, அவை மீண்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கே அளிக்கப்பட வேண்டும் என்று பரவலாக எழுப்பப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், 1991 ஜூலை 15இல் தமிழக அரசு ஆணை எண்:1/4868/90ஐப் பிறப்பித்தது. இதன்படி, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், அவரவர் மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட மொத்த பஞ்சமி நிலங்கள், பிற சமூகத்தவரால் அபகரிக்கப்பட்ட பஞ்சமி நிலங்கள் ஆகியவற்றைக் கணக்கெடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். இது தொடர்பான ஆவணங்கள் இல்லாததால், பல லட்சம் ஏக்கர் பஞ்சமி நிலங்கள் பிற சமூகத்தவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள போதிலும், அதை நிரூபித்துக் கையகப்படுத்த இயலவில்லை.

பஞ்சமி நிலங்களை மீட்பதற்காகக் கடந்த ஆண்டுகளில் தலித், இடதுசாரி இயக்கங்களால் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. 1994இல் செங்கல்பட்டு அருகே காரணை என்னும் ஊரில் நடந்த போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டதன் விளைவாக நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில், தலித் சமூகத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர். பஞ்சமி நிலம் மீட்கப்படவும் அது குறித்தான அப்போதைய நிலையை ஆராயவும் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி மருதமுத்து தலைமையில், 2011 ஜனவரி 17இல் குழு ஒன்று அப்போதைய தமிழக முதல்வர்

மு.கருணாநிதியால் அமைக்கப்பட்டது. அவருக்குப் பின் முதல்வராகப் பொறுப்பேற்ற ஜெயலலிதா, நீதிபதி மருதமுத்து தலைமையிலான குழுவைக் கலைத்து, அக்குழுவின் பணிகளை அரசு உயர் அதிகாரிகளிடமே ஒப்படைத்தார். இந்நடவடிக்கையால் பஞ்சமி நில மீட்புச் செயல்பாடுகள் பின்னடைவைச் சந்தித்தன. பஞ்சமி நிலங்கள் தொடர்பான ஆவணங்கள் அரசின் ஆவணக் காப்பகத்திலேயே முழுமையாக இல்லாத சூழலில், அவற்றை மீட்பது மாநில அரசுக்கு மிகப்பெரிய சவால் என்பதில் ஐயமில்லை.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டத்தில் உள்ள இங்கூர் தொழிற் பூங்காவில் பட்டியல் சாதியைச் சேர்ந்தவர்கள் தொழிற்சாலைகள் அமைப்பதற்காக 150 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு தொழில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்திடமிருந்து தாட்கோ ஆதிதிராவிடர் வீட்டுவசதிக் கழகம் 99 ஆண்டு குத்தகைக்கு 1995இல் வாங்கியது. இந்நிலத்தில் பல்லாண்டுகளாக எந்தத் தொழிலும் தொடங்கப்படாமையால், 48 ஏக்கர் நிலத்தை 2021இல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி திருப்பூர், ஈரோட்டைச் சேர்ந்த 3 தனியார் நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு தொழில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் ஒதுக்கீடு செய்துள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட அரசு, கோயில் நிலங்களை மீட்க அதிரடி நடவடிக்கை எடுத்துவரும் தமிழக அரசு, பஞ்சமி நிலங்கள் உள்ளிட்ட பட்டியல் சாதியினருக்குத் தரப்பட்ட நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பதிலும் அக்கறை காட்ட வேண்டும். சமீபத்தில் உயர்நீதிமன்ற மதுரைக் கிளை, கோயில் நிலங்களை மீட்பதில் ஒத்துழைப்புப் தர மறுக்கும் அதிகாரிகள் சிறை செல்ல நேரிடும் எனக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதே போன்று கடும் எச்சரிக்கைகள் பஞ்சமி நிலங்களை மீட்பதற்கும் தேவைப்படுகின்றன.


சமூக நீதிக்கு முன்னுரிமை தரும் விதத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆங்கிலேய ஆட்சியாளர்களால் அளிக்கப்பட்ட பஞ்சமி நிலங்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டு, தகுதி உடைய தலித் மக்களுக்கு வழங்கி, தலித் சமூகத்தின் பஞ்சமி நில மீட்பு எனும் நீண்ட காலக் கனவினை நனவாக்க தமிழ்நாடு அரசு முன்வர வேண்டும்.

தொகுப்பு : **இரா.மங்களா பாண்டியன்,**
மாநில துணைத்தலைவர்



திருப்பூர் TNROA மாவட்டச் செயலாளர் தோழர்.க.மதன்குமார் திருமண வரவேற்பு நிகழ்வில் மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன், பொதுச் செயலாளர் சு.சங்கரலிங்கம், த.நா.அரசு ஊழியர் சங்க பொதுச் செயலாளர் ஆ.செல்வம் மற்றும் திருப்பூர் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# யாரிந்த ஸர் தாமஸ் மன்றோ..



சென்னை தீவுத்திடலை கடப்பவர்கள், தீராத காதலோடு வங்கக் கடலை பார்த்தபடியே 6000 கிலோ எடை கொண்ட வெண்கல சிலையாக சேனம், கயிறு ஏதுமற்ற கட்டுக்கடங்காத குதிரையின் மீது கம்பீரமாக அமர்ந்திருக்கும் ஸர் தாமஸ் மன்றோவை கண்டிப்பாக தரிசித்து வணங்கி செல்ல வேண்டும் என்பது என் அவா..

ஸ்காட்லாந்து நாட்டில் பிறந்து பிரிட்டிஷ் ராணுவ படைவீரனாக இந்தியாவில் நுழைந்து கவர்னராக நிருவாகம் செய்து இந்தியர்கள் குறிப்பாக தென்னக மக்களின் இதயத்தில் இடம் பிடித்தவர்.

இரும்பு இதயம் கொண்ட வெள்ளையர்களில் மன்றோ இளகியவர். எளிய மக்களின் துயரங்களை உணர்ந்து அவர்கள் வாழ்க்கையில் மாற்றங்களைக் கொண்டு வந்தவர். நிர்வாகம், கல்வி, காவல்துறை எனப் பல்வேறு துறைகளில் அவர் செய்த சீர்திருத்தங்கள் இன்று வரை இந்திய நிர்வாகத்தில் நடைமுறையாக இருக்கிறது.

திப்புசுல்தானை வீழ்த்திய போரை முன்னின்று நடத்திய கவர்னர் கார்ன் வாலிஸ், ‘இவன் இந்தியாவை நிர்வகிக்க தகுதியானவன்‘ என்று தீர்மானித்து, மன்றோவை ராணுவத்தில் இருந்து விடுவித்து சிவில் பணிக்கு மாற்றினார். சேலம், தர்மபுரி, ஊத்தங்கரை, திருப்பத்தூர் பகுதிகளை உள்ளடக்கிய பாரமஹால் பிரதேசத்தை நிர்வகிக்கும் பொறுப்பை மன்றோவுக்கு வழங்கினார். 12 ஆண்டுகள் களமுனையில் நின்று யுத்தம் செய்த மன்றோ, ராணுவச் சீருடை களைந்து வருவாய் ஆய்வாளரானார்.

பொறுப்பேற்கும் முன்பு, மக்களின் வாழ்க்கை முறையை அறிந்துகொள்ள விரும்பிய மன்றோ, கிராமம் கிராமமாக தன் குதிரையில் பயணித்தார். அக்காலத்தில் பிரிட்டிஷ் அரசு, மக்களிடம் நிலத்தீர்வை வரியை வசூலிக்கும் உரிமையை ஜமீன்தார்களிடமும் நிலச்சுவான் தாரர்களிடமும் வழங்கியிருந்தது.

பிரிட்டிஷ் நிர்வாகம் நிர்ணயித்ததை விட அதிகமாக மக்களிடம் வரியை உறிஞ்சிய இந்த இடைத்தரகர்கள், வசூலான வரியில் பெரும்பகுதியை தாங்கள் சுருட்டிக் கொண்டு ஒரு பகுதியை மட்டுமே

பிரிட்டிஷ் நிர்வாகத்துக்குத் தந்தார்கள். வரி கட்டமுடியாத மக்களின் நிலங்களைப் பறித்து தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருந்தார்கள். இந்த ஜமீன்தாரி அவலத்திலிருந்து மக்களை விடுவிக்க நினைத்த மன்றோ, 'இனி அதிகாரிகளே மக்களிடம் நேரடியாக வரி வசூலிப்பார்கள்... ஜமீன்தார்களுக்கு இடமில்லை' என்று அறிவித்தார். நிலங்களை பதிவு செய்யும் ஒவ்வொரு விவசாயியும் நில உரிமையாளராக அங்கீகரிக்கப்பட்டனர். நிலத்தின் மீதான அனைத்து உரிமைகளையும் பெற்றனர்.

இந்த வரியை வசூலிக்க கலெக்டர் என்ற நிர்வாகப் பதவியையும் உருவாக்கினார். அதன் தொடர்ச்சியாக அவர் மாவட்டங்கள், வட்டங்களை உருவாக்கி தாசில்தார் உள்ளிட்ட வருவாய்த்துறை பணியிடங்களை ஏற்படுத்தினார். அதில் பெரும்பாலான அலுவலர்கள் உள்ளூரை சேர்ந்தவர்களாக, இந்தியர்களாக இருக்க வேண்டும் என்பதில் தீவிரம் காட்டினார்.

இதற்கு ஆங்கிலேய அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்தபோது, 'உள்ளூர் மக்களை முக்கியமான அலுவலகங்களில் இருந்து விலக்கிவிட்டு 'Paternal Government' என எந்த அடிப்படையில் சொல்ல முடியும்? நாளை பிரிட்டனை இன்னொரு வெளிநாட்டு சக்தி கட்டுப்படுத்தி, மக்களை அரசிடமிருந்து விலக்கி வைத்தாலோ, ஒவ்வொரு சூழலிலும் நம்பிக்கை அற்றவர்களாக ஆக்கினாலோ அவர்களை இரண்டு தலைமுறைகள் ஆனாலும் காப்பாற்ற முடியாது. நீங்கள் இந்தியாவை இங்கிலாந்தாகவோ, ஸ்காட்லாந்தாகவோ மாற்ற இயலாது. நீங்கள் இந்த இடத்தை விட்டுச் செல்லத்தான் வேண்டும். இந்தியர்கள் தாங்களாகவே இந்த நாட்டை ஆண்டு கொள்வார்கள்' என்று அவர் சொன்னது கி.பி 1800இன் தொடக்க காலத்தில் என்றால் அவரது தீர்க்க தரிசனம் எத்தகையது. அவர் உருவாக்கிய கலெக்டர் பதவியே சிறிதும் பெரிதுமாக மாற்றத்துக்குள்ளாகி இன்றுவரை நடைமுறையில் இருக்கிறது.

இந்த புதிய வரி விதிப்பு முறைக்கு பெயர்தான் இரயத்துவாரி முறை என்பதும் இரயத்துவாரி முறையின் தந்தை என ஸர் தாமஸ் மன்றோ பாராட்டப்படுகிறார் என்பதையும் நான் சொல்லித்தான் உங்களுக்கு தெரிய போவதில்லை. நன்கு அறிந்திருப்பீர்கள்.

தாமஸ் மன்றோ பிற பிரிட்டிஷ் அதிகாரிகளைப் போல அன்றி மக்களுக்கு நெருக்கமானவராக இருந்தார். மக்களோடு மக்களாகி பல இடங்களுக்கு குதிரையில் பயணப்பட்டு கொண்டே இருந்தார்.

'ஓர் அரசு அதிகாரி தனது அலுவலக ரீதியான பயணத்தின்போது எவரிடமும் உணவோ, பொருட்களோ, பரிசோ வாங்கக் கூடாது. அது முறைகேடான செயல் என்று கூறிய மன்றோ, தனது பயணத்தில் கிராமத்து விவசாயி வீட்டில் குடித்த பாலுக்குக்கூட பணம் கொடுத்திருக்கிறார் என்கிற பதிவு உள்ளதை எண்ணி பார்த்தால் உடல் சிலிர்த்து, குற்ற உணர்வால் மனம் கூனி குறுகி போகிறது.

மன்றோவின் நிர்வாகத் திறனை மெச்சி ஆங்கிலேய அரசு, 1820ம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்தின் கவர்னராக அவரை நியமித்தது. காவல்துறையிலும் நீதித்துறையிலும் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார் மன்றோ.

மன்றோ கவர்னராக இருந்த காலக்கட்டத்தில் மனைவி வில்ஹெல்மினாவுக்கும் மகன் காம்பெலுக்கும் உடல்நலக் குறைவு ஏற்பட்டது. உடனடியாக இருவரையும் இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார் மன்றோ. தானும் மனைவியின் அருகில் இருக்க விரும்பினார். பதவியில் இருந்து தன்னை விடுவிக்கும்படி பிரிட்டிஷ் அரசுக்கு கடிதம் எழுதுகிறார். ஆனால் அவரை விட்டுவிட மனமில்லாத ஆங்கிலேய அரசு 'இந்தியாவின் கவர்னர் ஜெனரல் பதவி தருகிறோம்' என்றது. ஆனால், மன்றோ ஏற்றுக்கொள்ளவில்லை. தனது இறுதிக்காலத்தை மனைவியின் அருகிலும் தாய்நாட்டிலும் கழிக்க விரும்பினார்.

அப்போது மன்றோவுக்கு 65 வயது. பணியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற மன்றோவின் கோரிக்கையை பிரிட்டிஷ் நிர்வாகம் தள்ளிப்போட்டுக் கொண்டே போனது.

பணிக் காலத்தில் தான் மிகவும் நேசித்த கடப்பா பகுதிக்கு ஜூலை 1827ல் பயணப்பட்டார். அங்கு காலரா நோய் பரவிக் கொண்டிருப்பதால் செல்ல வேண்டாம் என மன்றோவுக்கு ஆலோசனை கூறப்பட்டது. 'ஒரு கொடு நோயால் மக்கள் தவிக்கும் போது ஓர் அதிகாரி தள்ளி நின்று வேடிக்கை பார்ப்பது அழகல்ல...' என்று சொன்ன மன்றோ, கடப்பாவுக்குப் பயணித்தார். கிராமம் கிராமமாகப் போய் மக்களுக்கு ஆறுதல் சொன்னார். அப்போது மன்றோவையும் காலரா தாக்கியது.

நோயின் தீவிரம் வீரியமாக, எங்கோ பிறந்து கடல் கடந்து வந்து இந்த மண்ணையும், மக்களையும் உயிருக்குயிராய் நேசித்த சர் தாமஸ் மன்றோவின் உயிர், 1827 ஜூலை 6ம் தேதி பிரிந்தது.

வேதனை என்ன தெரியுமா? தனது இறுதி காலத்தை மனைவியோடும் மகனோடும் கழிக்க விரும்பிய மன்றோ தனது ராஜினாமா கடிதத்தை அளித்ததோடு இலண்டன் திரும்ப Asia கப்பலில் ஒரு டிக்கெட்டும் எடுத்திருந்தார்.

கப்பலேறி போயாச்சு சுத்தமான ஊராச்சு என்று வெள்ளையரை வெளியேற்றி கொண்டாடிய இந்திய தேசம் மன்றோவை மட்டும் அவரது குடும்பத்திற்கு கூட தராமல் தன் மகனாய் தன்னுள் புதைத்துக் கொண்டது...

– **பெ.வெங்கடேசன்**, திருச்சிராப்பள்ளி.



காஞ்சிபுரம் TNROA மாவட்டச் செயலாளர் தோழர்.சே.நவீன்குமார் திருமண வரவேற்பு நிகழ்வில் மாநிலத் தலைவர் எம்.பி.முருகையன், பொதுச் செயலாளர் சு.சங்கரலிங்கம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.



கோவை மாவட்டத்தில் வருவாய்த்துறை தினத்தை முன்னிட்டு கொடியேற்றத்துடன் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் செந்தில்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பாக மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர் திரு. தர்ப்பகராஜ், இ.ஆ.ப., அவர்களால் மரக்கன்று நடப்பட்டு சிறப்பிக்கப்பட்டது



திருவாரூர் மாவட்டத்தில் வருவாய்த்துறை தினம் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இதில் மாநிலப் பொருளாளர் வெ.சோமசுந்தரம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுக் குழு கூட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர்கள், கு.குமரேசன், வெ.அர்த்தனாரி, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் திரளாக பங்கேற்றனர்.

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
June 2024
Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002





வருவாய்த்துறை அலுவலர்களுக்கு புதிய ஈப்புகள் வழங்கிட, கடந்த பிப்ரவரி மாதம் நடைபெற்ற காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தின் போது அரசாணை பெறப்பட்டது. இதனை தொடர்ந்து வருவாய்த்துறை அலுவலர்களுக்கு புதிய ஈப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

If undelivered Please Return to:
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
பி.எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005



வைர விழா ஆண்டு மாநில மாநாட்டிற்கு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களிடம் அழைப்பு விடுக்கப்பட்டது



Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.